எபேசியர் 6:11

நீங்கள் பசாசின் தந்திர சற்பனைகளுக்கு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாய் இருக்கும்படிக்குச் சர்வேசுரனுடைய போராயுதங்களை அணிந்துகொள்ளுங்கள். ( உரோ. 13:12.)

சங்கீதங்கள் 32:7

அவர் சமுத்திரத்தின் சலங் களைப் பாத்திரத்திற் சேர்ப்பதுபோற் சேர்த்து, அவைகளை பொக்கிஷத் தில் அடைப்பதுபோல பாதாளங் களில் அடைத்துவிட்டார்.

சங்கீதங்கள் 46:1

சகல சனங்களே! நீங்கள் கைகளைக் கொட்டி தேவனுக்கு முன் கெம்பீர சத்தத்தோடு ஆர்ப்பரி யுங்கள்.

எபிரேயருக்கு எழுதிய நிருபம் 13:6

ஆகையால், ஆண்டவரே எனக்கு உதவி; மனிதன் எனக்கு என்ன செய்வானோவென்று பயப்படமாட்டேன் என்று நாம் நம்பிக்கையோடு சொல்லலாமே. (சங். 117:6.)

உபாகமம் 31:6

வீரங்கொண்டு மனத்தைரிய மாயிருங்கள். அவர்களைப் பார்த்து அஞ்சவும் திகைக்கவும் வேண்டாம். ஏனெனில் உன் தேவனாகிய கர்த்தர் தானே உன்னை நடத்துபவர், அவர் உன்னை விடப் போவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்றான் (உபா. 7:2).

சங்கீதங்கள் 18:35-36

இசாயாஸ் ஆகமம் 54:17

உனக்கு விரோதமாய் முஸ்திப் புச் செய்யப்பட்ட ஆயுதம் உன்பால் பிரயோகமாகா; உனக்குத் தண்டனை விதிக்க எத்தனித்த நாவை நீயே கண்டனஞ் செய்வாய்; ஆண்டவ ருடைய தாசர்களுக்குச் சுதந்தரம் இதுவேயாகும்; அவர்கள் இங்ஙன மாக நீதியை நம்மிடங் காண்பார்கள் என்கிறார் ஆண்டவர்.

சங்கீதங்கள் 16:1

ஆண்டவரே, என் ஞாயத்தைக் கேட்டருளும்; என் மன்றாட்டுக்குச் செவி தந்தருளும். என் வார்த்தையில் கபடமில்லாததினால் நான் வேண்டிக் கொள்ளும் மன்றாட்டுக்கு செவி கொடும்.

யாத்திராகமம் 14:14

ஆண்டவர் உங்களுக்காகப் போராடுவார், நீங்களோ பேசாதிருப்பீர்கள் (என்றுரைத்தான்.) மூ 14-ம் வசனம். இங்கே மோயீசனுடைய சுகிர்த சாந்தகுணம் எவ்வளவு நேர்த்தியாய் விளங்குகிறது. அவர் இஸ்றாயேலியரின்பேரில் பட்சம்வைத்து அவர்களுக்கு எத்தனை உபகாரங்களைச் செய்துவந்திருந்தாலும் அவர்கள் நன்றிகெட்டவர்களாய் அவர் மேல் எப்போதும் முறுமுறுத்து விரோதித்து வந்தார்கள். ஆனால் அவர் சுவாமியுடைய மகிமையை மாத்திரந் தேடுகிறவராகையால் சகலத்தையும் பொறுமையோடு சகித்துக்கொண்டு வந்தார்.

சங்கீதங்கள் 118:6

உமது சகல கற்பனைகளின்படி நான் நடந்துகொள்வேனேயாகில் எனக்கு வெட்கம் நேரிடாது.

பிலிப்பியர் 4:13

என்னைப் பலப்படுத்துகிறவரைக்கொண்டு என்னால் எல்லாங்கூடும்.

சங்கீதங்கள் 119:114

இசாயாஸ் ஆகமம் 46:4

நீங்கள் என்னைச் சுமக்க வேண்டாம்; நாமே உங்களை விருத் தாப்பியப் பரியந்தம், வயோதிப காலந் தனையுந் தூக்கிப் போவோம்: உங்க ளைச் சிருஷ்டித்தோம், இன்னும் உங்களைத் தாங்குவோம், தூக்கிப் போவோம், இரட்சிப்போம்.

பழமொழியாகமம் 4:23

உன் இருதயத்தை எவ்வித எச்சரிக்கையுடனும் பாதுகாத்துக் கொள்! ஏனெனில், சீவியமே அதி னின்று புறப்படுகின்றது.

சங்கீதங்கள் 16:8

உமது வலது கரத்திற்கு இடர் செய்கிறவர்களிடத்தில் நின்று கண் மணியைப் போல் என்னைக் காத்தரு ளும்; என்னைத் துன்பப்படுத்தின அக்கிரமிகளுடைய கையில் அகப் படாதபடிக்கு என்னை உமது செட்டைகளின் நிழலில் ஆதரியும்.

சங்கீதங்கள் 18:30

சங்கீதங்கள் 59:16

சங்கீதங்கள் 3:3

ஆண்டவரே! என்னை ஆதரிக் கிறவர் நீரே! என் மகிமை நீரே! என் சிரசை உயர்த்துகிறவர் நீரே!

உரோமாபுரியார் 1 8:31

இவைகளைப்பற்றி நாம் என்ன சொல்லுவோம்? சர்வேசுரன் நம்முடைய பாரிசமாயிருந்தால் நமக்கு விரோதமா யிருப்பவன் யார்?

பழமொழியாகமம் 30:5

தேவ வாக்கியம் அக்கினியால் (பரிசுத்தப்)பட்டது; அதை நம்பி இருக்கின்றவர்களுக்கு (அது) கேடய மாம்.

சங்கீதங்கள் 118:8

நான் உமது கட்டளைகளின் படி நடப்பேன்; என்னை ஒருபோ தும் கைவிடாதேயும்.

இசாயாஸ் ஆகமம் 1:17

நன்மைசெய்யக் கற்றுக் கொள்ளுங்கள்; நீதியைத் தேடுங்கள், இடுக்கண்பட்டவனுக்கு உதவுங்கள்,

அனாதைப் பிள்ளைக்கு நீதி கூறுங்கள், கைம்பெண்ணைப் பாது காருங்கள்.

பழமொழியாகமம் 18:10

மகா திடமான உப்பரிகை யாம் ஆண்டவரின் நாமம்; நீதிமான் அதனிடம் ஒடுகிறான்; அதனால் அவன் உயர்த்தவும்படுவான்.

சங்கீதங்கள் 34:22

ஆண்டவரே! தேவரீர் பார்த் தீரே; கர்த்தரே, மவுனமாயிருந்து என்னை விட்டு அகலாதேயும்.

அரசராகமம் 2 22:32

கர்த்தரை அல்லாது தேவன் யார்? நம்முடைய தேவனேயன்றி வல்லமையாயிருக்கிறவன் யார்?